

கோவை கொடீசியா மைதானத்தில், தி.மு.க. சார்பில், இன்று நடைபெற உள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகளை,கழக துணைப்பொதுச் செயலாளர் ஆ.ராசா.எம்.பி, தமிழ்நாடு வீட்டுவசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் பார்வையிட்டனர், உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி,கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன். தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், டி.ஆர்.சண்முகசுந்தரம், வடக்கு மாவட்ட துணைச்செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, அறிவரசு, மருத்துவர் கோகுல், நாகராஜ், தளபதிதியாகு,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

# கோவையில் இன்று கழக முப்பெரும் விழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி அறிக்கை!



திருச்சி, ஜூன் 15-

திருச்சி தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், இன்று மாலை 4 மணி அளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, 40 நாடாளுமன்ற தொகுதிகளை வென்று எடுத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு விழா என கழக முப்பெரும் விழாவாக பொதுக்கூட்டமாக நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர் நிர்வாகிகள் அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும்துணை அமைப்பாளர்கள் கழகத் தொண்டர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

# கோவை-முப்பெரும் விழாவில் நாகை மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாகப் பங்கேற்போம்!

### தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை

நாகை, ஜூன் 15 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுகூட்டம் நாகை மாவட்டக் கழக அலுவலகத்தில் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தரசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்தும், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

ஜூன் 15ம் தேதி கோவையில் நடைபெற உள்ள தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் பெற்ற வெற்றிக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, இந்தியா, வியந்து பார்க்கும் இந்த வெற்றிக்கு நம்மை அழைத்துச் சென்ற கழகத்தலைவர், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு நாகை மாவட்டத்தில் இருந்து கழக நிர்வாகிகள், கழகத்தினர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் அதிக அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 101வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் நடத்தப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, மருத்துவ, இரத்ததான முகாம், மரக்கன்று நடுதல், வழங்கல் போன்ற பல்வேறு நிகழ்ச்சியுடன் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் கலைஞர் 101 வது பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடத்திடுவது என்றும், இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும் என்றும்,

நாகை நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான இந்திய கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வை.செல்வராஜ்க்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்வதோடு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இந்தியா கூட்டணி சார்பில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிட்ட வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும், என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

---

## திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட த.வேணுகோபால் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், **மாவட்ட அவைத்தலைவர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ப.சேகர் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், **மாவட்ட அவைத்தலைவர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகத்தினர்

# கோவை முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்போம்!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் வேண்டுகோள்



ஒசூர்,ஜூன் 15-

கோவையில் கழகத் தலைவர் மு.க ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் என மாவட்ட கழக செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் கழக தலைவர் தமிழநாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பில் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கோவையில் முப்பெரும் விழா

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஜூன் 15-

திராவிட முன்னேற்றக் கழக முப்பெரும் விழா கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் அலை கடலென திரண்டு வாரீர் என மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் கடந்த 8.6.2024 ஆம் நாள் அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற "கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத் தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,

நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் சீர்மிகு விழா,

தமிழ்நாட்டு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற கழகத் தலைவர், முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் தளபதியார் அவர்களுக்குப் பாராட்டு விழா என "முப்பெரும் விழா" இன்று ("ஜூன் 15ஆம் தேதி) மாலை 4 மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில்" மிக பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது.

கழகத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள இந்த விழாவில் நம் கூட்டணிக் கட்சித்தலைவர்கள், வெற்றிபெற்ற நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இந்த முப்பெரும் விழாவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த முன்னோடிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கோபண்ணா தலைமையில் - மூத்த பத்திரிக்கையாளர்

# சின்னக்குத்தூசி 90வது பிறந்தநாள்! வாழ்நாள் சாதனையாளர் விருது விழா!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் - நக்கீரன் கோபால் - க.திருநாவுக்கரசு சிறப்புரை!



சென்னை, ஜூன் 15-

சின்னக்குத்தூசி நினைவு அறக்கட்டளை சார்பில் மூத்த பத்திரிக்கையாளர் சின்னக்குத்தூசி அவர்களின் 90-ஆவது பிறந்தநாள் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழா நாளை (16.6.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் கவிக்கோ அரங்கம் 2-ஆவது மெயின் ரோடு சி.ஐ.டி. காலனி மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

நக்கீரன் கோபால் வரவேற்புரையாற்றுகிறார். நிகழ்ச்சிக்கு காங்கிரஸ் கோபண்ணா தலைமை வகிக்கிறார். திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பங்கேற்று வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குகிறார். இதில் நடிகர் பொன் வண்ணன், இயக்குநர் கரு.பழனியப்பன், ஓவியக் கலைஞர் அமுதபாரதி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சியை கோ.வி. லெனின் தொகுத்து வழங்குகிறார். ஆவுடையப்பன் நன்றியுரையாற்றுகிறார்.

---

## திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், **மாவட்ட அவைத்தலைவர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **ஜூன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய / நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஆர். கண்ணன்

### ஜூன் 15 (1976)



**தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகம் தோன்றியபோது வாழ்நாள் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டு கழகத்தின்மீது நீங்காப் பற்றும், தணியாத ஆர்வமும் கொண்டு கொள்கை உறுதியோடு கழகப் பணி ஆற்றி வந்தார்.**

**1959ல் முதன்முதலாக கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சியின் அப்போதைய 27வது வட்ட மன்ற உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பணியாற்றியதோடு; 1967, 1971 ஆகிய இரண்டு முறை சென்னை, 'பேசின்பிரிட்ஜ்' சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**"நெஞ்சுரமிக்க தளபதி ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்துவிட்டது. அந்தோ! புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நிற்கும் ஆருயிர் உடன்பிறப்பையல்லவா நான் இழந்துவிட்டேன்" என 'என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா!' என்ற கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**